Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 33 | புதன்கிழமை Wednesday | 03.12.2025 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்; இதுவரை 9 லட்சம் பேர் பயன்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தகவல்



சென்னை;

ஆக.2ல் தொடங்கப்பட்ட நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தால் இதுவரை 9.86 லட்சம் பேர் பயன் அடைந்தனர்என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். 2025-26-ம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையில், உயர் மருத்துவ சேவைகள் வழங்க மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதன்படி, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினை முதல்வர் மு.க.ஸ்டாலின்ஆக.2ம் தேதி சென்னை, சாந்தோம், செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தொடங்கி வைத்தார்.

இந்த உயர் மருத்துவ சேவை சிறப்பு முகாம் ஒன்றிற்கு 1.08லட்சம் வீதம் மாநிலம் முழுவதும் மொத்தம் 1,256 முகாம்களுக்குரூ.13.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த முகாம்கள் சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரகப் பகுதிகள், குடிசைப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. 40 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு மற்றும் உயர் ரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மனநல பாதிப்புடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சிக் குன்றிய குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் சமூக-பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு இம்முகாம்களில் முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில்; நலம் காக்கும்ஸ்டாலின் திட்டத்தின் செயல்பாடு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்நிலையில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தால் இதுவரை 9.86 லட்சம் பேர் பயன் அடைந்தனர்என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அவர்; கடந்த ஆகஸ்ட் 2-ஆம் நாள் தொடங்கப்பட்ட நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில் திட்டத்தின் மூலம் இதுவரை 632 முகாம்கள் நடத்தப்பட்டு, 9,86,732 பேர் பயனடைந்துள்ளனர். ஏழை, எளிய மக்கள் அதிகளவில் பயனடைந்து வருகின்றனர் என்ற செய்தி மகிழ்ச்சி அளிக்கிறது. புற்று நோய், இருதய நோய், காசநோய் எனப் பலருக்கு தொடக்க நிலையிலேயே நோய்கள் கண்டறியப்படுகின்றன.

தொடக்க நிலையிலேயே நோய் கண்டறியப்பட்டு மேல் சிகிச்சை தருவதை திட்டத்தின் முக்கிய வெற்றியாக பார்க்கிறேன். முகாம்கள் மேலும் சிறப்பாக அமைந்திட, மக்கள் சொன்ன கருத்துகளை அதிகாரிகளுக்கு உத்தரவுகளாக வழங்குகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# 2ம் நாள் கூட்டத்தொடர்; எதிர்க்கட்சிகள் அமளியால் முடங்கியது பார்லிமெண்ட்!



புதுடில்லி: பார்லிமென்ட் 2ம் நாள் கூட்டத்தொடரில் (டிச.,02) எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியால் லோக்சபா, ராஜ்யசபா ஆகிய இரண்டு அவைகளும் மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

பார்லி.,யின் குளிர்கால கூட்டத்தொடர் நேற்று (டிச.,01) துவங்கியது. வரும் 19ம் தேதி வரை நடக்கும் இந்த கூட்டத் தொடரில், முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

ஆனால், செங்கோட்டையில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவம், புதிய தொழிலாளர் சட்டங்கள், எஸ்.ஐ.ஆர்., விவகாரம் ஆகியவற்றை விவாதிக்க வலியுறுத்தி, எதிர்க்கட்சிகள் முதல் நாளே சபையை முடக்கினர்.

இந்நிலையில் (டிச.,02) 2வது நாள் கூட்டத்தொடர் காலை 11 மணிக்கு தொடங்கியது. லோக்சபா கூடியதும் எஸ்ஐஆர் பணி குறித்து விவாதம் நடத்தக்கோரி எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர்.

சபாநாயகர் ஓம்பிர்லா பலமுறை எச்சரித்தும் கேட்கவில்லை. அவையில் கூச்சல், குழப்பம் நிலவியது. அவையை மதியம் 2 மணி வரை ஓம்பிர்லா ஒத்திவைத்தார்.

### ராஜ்யசபா

அதேபோல், ராஜ்யசபாவை இன்று (டிச.,02) துணை ஜனாதிபதியாக பதவியேற்ற சி.பி.ராதாகிருஷ்ணன் 2வது நாளாக நடத்தினார். எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டதால், அவை மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

### ஆர்ப்பாட்டம்

முன்னதாக, பார்லி வளாகத்தில் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தப்பணியை (எஸ்ஐஆர்) கண்டித்து, இண்டி கூட்டணி எம்பிக்கள் ஆர்பாட்டம் நடத்தினர். இதனால், பார்லிமென்ட் வளாகத்தில் பரபரப்பான சூழல் நிலவியது.


வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் நேற்றும் இன்றும் மக்களவையில் அமளியில் ஈடுபட்டன. எதிர்க்கட்சிகளின் அமளியால் மக்களவை நேற்றும் இன்றும் அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டது. இன்று, மாநிலங்களவையும் ஒத்திவைக்கப்பட்டது.

இதையடுத்து, அவையை சுமுகமாக நடத்துவது தொடர்பாக சபாநாயகர் ஓம் பிர்லா தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் மற்றும் அலுவல் ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து விவாதிக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

கூட்டத்துக்குப் பிறகு மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ வெளியிட்ட எக்ஸ் பதிவில், "இன்று மக்களவை சபாநாயகர் தலைமையில்நடைபெற்றஅனைத்துக் கட்சிக் கூட்டத்தின்போது டிச.8-ம் தேதி திங்கள்கிழமை நண்பகல் 12 மணி முதல் தேசியப்பாடலானவந்தே மாதரம் பாடலின் 150-வது ஆண்டு விழா குறித்து மக்களவையில் விவாதம் நடத்தவும், டிச.9-ம் தேதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி முதல் தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து விவாதம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் தலைமை கொறடா கே.சுரேஷ், "அலுவல் ஆலோசனைக் குழு கூட்டத்தில் வந்தே மாதரம் மற்றும் தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்த விவாதங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. திங்கள்கிழமை வந்தே மாதரம் குறித்த விவாதத்தை அவை மேற்கொள்ளும். பின்னர், செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமை தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து அவை விவாதிக்கும்" என்று தெரிவித்தார்

# வங்கக்கடலில் உருவான திட்வா புயல் மேலும் வலுவிழந்து



வங்கக்கடலில் உருவான திட்வா புயல் மேலும் வலுவிழந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்திருக்கிறது. வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கைப்படி "அதிகாலை 5.30 மணி நிலவரப்படி, சென்னைக்கு கிழக்கு-தென்கிழக்கே 40 கி.மீ தொலைவிலும், கடலூருக்கு வடக்கு-வடகிழக்கே 150 கி.மீ தொலைவிலும் புதுச்சேரிக்கு வடகிழக்கே 130 கி.மீ தொலைவிலும் நிலைகொண்டிருந்தது. மத்திய மேற்கு மற்றும் தென்மேற்கு வங்கக்கடல், வட தமிழ்நாடு மற்றும் தெற்கு ஆந்திரா கடற்கரைப் பகுதியையொட்டி மையம் கொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், தென்மேற்குதிசையில்நகர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழந்திருக்கிறது.". "இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் மையப் பகுதியானது, வட தமிழ்நாடு-புதுச்சேரி கடற்கரையிலிருந்து25கி.மீதொலைவில் இருக்கிறது. இது அடுத்த 12 மணி நேரத்துக்கு காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவே தொடரும். அதன்பின் அடுத்த 12 மணி நேரத்தில் குறைந்த காற்றழுத்தப் பகுதியாக மேலும் வலுவிழக்கும்" என்று வானிலை ஆய்வு மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஆங்காங்கே கனமழை பெய்யக்கூடும்.

தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழ்நாட்டின் வட கடலோரம் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களிலும், புது ச்சேரியிலும் மணிக்கு 45-55 கிமீ வேகத்தில் வேகமான காற்று வீசக்கூடும். டிசம்பர் ஒன்றாம் தேதி இரவு 11.30 மணியளவில் வடதமிழ்நாடு,புதுச்சேரி, தெற்கு ஆந்திர கடற்கரைகளில் மணிக்கு 50-60 கிமீ வேகத்தில் (அவ்வப்போது மணிக்கு 70 கிமீ வேகத்திலும் வீசியது) வீசிவந்தது. டிசம்பர் 2 காலை இதன் வேகம் மணிக்கு 45-55 கிமீ வேகத்துக்கு குறையக்கூடும். அவ்வப்போது மணிக்கு 65 கிமீ வேகம் வரை வீசலாம்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**


DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# 2026 ஏப். முதல் 2027 பிப். வரை இரு கட்டங்களாக மக்கள் தொகை கணக்கெடுப்பு



புதுடில்லி:

வரும் 2026 ஏப்ரல் முதல் 2027 பிப்ரவரி வரை இரு கட்டங்களாக மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும்என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

பார்லியில் லோக்சபா காங்கிரஸ் எம்.பி., ராகுல் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் எழுத்துப் பூர்வமாக பதில் அளிக்கையில் இதை தெரிவித்துள்ளார். அவர் தமது பதிலில் மேலும் கூறி உள்ளதாவது;

மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது 2 கட்டங்களாக நடத்தப்படும். முதல் கட்ட கணக்கெடுப்பு 2026ம் ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையில் மாநில மற்றும் யூனியன் பிரதேசங்க ளின் வசதிக்கு ஏற்ப 30 நாட்களுக்குள் நடத்தப்படும். இதில் வீடுகளின் பட்டியல் கணக்கெடுக்கப்படும்.

இரண்டாம் கட்ட கணக்கெடுப்பில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும். இது பிப்.2027ல் நடைபெறும். ஏப்.30ல் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழுவால் முடிவு செய்யப்பட்டவாறு, 2027ல் மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது ஜாதி கணக்கெடுப்பும் எடுக்கப்படும்.

இவ்வாறு உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் தமது பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழகத்தின் முதல் கிளையான குனியமுத்தூர் மெல்பான்(Melbaan) அரேபியன் டெஸ்ஸர்ட் வகை உணவுகளை வாங்க பொதுமக்கள் ஆர்வம்

வாடிக்கையாளர்களின் ஏகோபித்த ஆதரவை தொடர்ந்து லபான் டிலைட் 10 சதவீத தள்ளுபடியில் இரண்டு வாடிக்கையாளர்களின் ஏகோபித்த ஆதரவை பெற்ற குனியமுத்தூரில் உள்ள தமிழகத்தின் முதல் மெல்பான் டெஸ்ஸர்ட் மாகியதை தொடர்ந்து தமிழகத்தில் முதன்மை மையமாக கோவை குனியமுத்தூரில் இந்த மெல்பான் மையம்



நாட்களுக்கு வழங்க உள்ளதாக குனியமுத்தூர் மெல்பான் உரிமையாளர்கள் அறிவிப்பு

சவூதிஅரேபியா,துபாய் போன்ற வளைகுடா நாடுகளில் உள்ள பிரபலமாக உள்ள எகிப்தியன் டெஸ்ஸர்ட் வகை உணவுக்கு பெயர் போன மெல்பான் நிறுவனம் தமிழகத்தில் முதல் விற்பனைமையமாககோவை குனியமுத்தூர் பகுதியில் கடந்த அக்டோபர் மாதம் தனது முதல் விற்பனை மையத்தை துவக்கியது..

துவங்கியநாள் முதலே வாடிக்கையாளர்கள் குனியமுத்தூர் மெல்பான் கடையின் முன்பாக குவிய துவங்கினர்..

குழந்தைகள் முதல் பெரியவர்கள் அனைவருக்கும் பிடித்த சுவையுடன் வழங்கப்படும் மெல்பான் டெஸ்ஸர்ட் வாங்குவதற்கு வாடிக்மையத்தில் ஐம்பதாவது தின விழா வெகு விமரிசையாக நடைபெற்றது..

துவக்க விழாவை முன்னிட்டு மெல்பான் டெஸ்ஸர்ட் லபான் டிலைட் வகைக்கு பத்து சதவீத சிறப்பு தள்ளுபடி அறிவிக்கப்பட்டது..

டிசம்பர் 3 மற்றும் 4 தேதிகளில் இரண்டு நாட்கள் இந்த தள்ளுபடி விற்பனையை வழங்க உள்ளதாக குனியமுத்தூர் மெல்பான் மைய உரிமையாளர்கள் தெரிவித்தனர்...

இந்நிலையில் இதற்கான விழாவில் பிரபல தொழிலதிபர் முகம்மது ஹாரிஸ் கலந்து கொண்டு சிறப்பு விற்பனையை துவக்கி வைத்தார்..

இது குறித்து குனியமுத்தூர் மெல்பான் விற்பனை மைய நிர்வாகிகள் கூறுகையில்,கேரளாவில் மெல்பான் பிரபலதுவங்கப்பட்டதாகவும்,மெல்பான் டெஸ்ஸர்ட் உணவை கோவை மக்கள் மிகவும் விரும்பி வாங்கிசெல்வதாகதெரிவித்தனர்..

மேலும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப லபான் டிலைட் வகைக்கு மட்டும் இரண்டு நாட்கள் பத்து சதவீத தள்ளுபடி வழங்குவதாக தெரிவித்தனர்.. குறிப்பாக திருமணம்,பிறந்த நாள் விழாக்கள் போன்ற சுப நிகழ்ச்சிகளுக்கு 95399 99996 என்ற எண்ணை தொடர்பு கொண்டால் மெல்பான் வகை டெஸ்ஸர்ட் ஆர்டரின் பேரில் வழங்கப்படும் எனவும் குனியமுத்தூர் மெல்பான் மைய நிர்வாகிகள் தெரிவித்தனர்..

இந்நிகழ்ச்சியில் அமீர்,சிஹாப்,அஹ்மத்,அப்பாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சி தேசிய சுகாதார திட்டம் 15 வது நிதி குழு சுகாதார மானியம் 202526 திட்டத்தின் கீழ் ரூபாய் 65 லட்சம் மதிப்பீட்டில் பொது சுகாதார மையம் அமைத்தல் பணிக்கான பூமி பூஜையை தாரமங்கலம் நகர மன்ற தலைவரும் நகர செயலாளருமான குப்பு (எ) குணசேகரன் தலைமையில் போடப்பட்டது. இந்நிகழ்வில் வட்டார மருத்துவ அலுவலர்கள் மருத்துவர்கள்,நகர மன்ற துணைத் தலைவர் தனம், நகர மன்ற உறுப்பினர்கள், திமுக நிர்வாகிகள்,வார்டு கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பாப்பநாயக்கன்பாளையம் ஸ்ரீ ரங்கம்மாள் ஆலயத்தில் கும்பாபிஷேக விழா விமர்சையாக நடைபெற்றது

கோவை தடாகம் அருகே உள்ள பாப்பநாயக்கன்பாளையம் ஸ்ரீ



ரங்கம்மாள் ஆலயமஹா கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இதில் யாக சாலை பூஜைகள் நடைபெற்று விமானக்கலசத்திற்கு புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் சுற்று வட்டாரங்களில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

கோவை தடாகம் அருகே உள்ள பாப்பநாயக்கன்பாளையம் பகுதியில் அமைந்துள்ளது கவரா நாயுடு, புஜபுல்ல குலம் மக்களின் குல தெய்வமான ஸ்ரீ ரங்கம்மாள் ஆலயம். இந்த ஆலயம் தற்போது புரணமைக்கப்பட்டு கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

சனிக்கிழமை காலை யாகசாலையில் ஸ்ரீ விக்னேஸ்வர பூஜை, ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், ஸ்ரீநவகிரகஹோமம்,கோ பூஜை, ஸ்ரீ மகாலட்சுமி ஹோமம், பூர்ணாஹுதி, தீபாரதனை நடைபெற்றது. மாலை வாஸ்து சாந்தி, பிரவேச பலி, அங்குரார் பணம், காப்பு அணிவித்தல்,



தீருத்சங்கீரஹணம், கலாகர்சனம், யாகசாலை மண்டப பூஜை, வேதிகார்ச்சனை, விசேஷ ஹோமங்கள், அன்னஹுதி திரவியா ஹிதி, முதல் காலம் மஹா பூர்ணாஹீதி, மகா தீபாராதனை நடைபெற்றது.இரவு கோபுர கலசம், பத்திர ஸ்தாபனம் செய்து அஷ்டபந்தன மருந்து சாத்துதல் நடைபெற்றது.

ஞாயிற்றுக்கிழமை இரண்டாம் கால பூஜை தொடங்கி மண்டப பூஜை, வேதிகார்ச்சனை, ஷன்னவதி, திரவியாஹீதி, மகா பூர்ணஹீதி, தீபாராதனை, யாத்ரா தானம், க்ரஹப்ரீதி நடைபெற்றது. இன்று புனித நீர் கும்பங்கள் யாக சாலையிலிருந்து புறப்பட்டு கோவிலை வலம் வந்து கோபுர கலசத்திற்கு புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து அருள்மிகு ஸ்ரீ ரங்கம்மாள் மூலவர் மற்றும் பரிவார விநாயகர், கன்னிமார் மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேக தீபாரதனை நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மகா அபிஷேகம்,மகாதிரிசதி, அர்ச்சனை,மகா தீபாராதனை நடைபெற்றது.

யாகங்கள் மற்றும் கும்பாபிஷேகத்தை வடவள்ளி ஸ்ரீ சிவயாக்செம்மல்,சிவ ஸ்ரீ சிவ சங்கர் சிவாசார்யார் குழுவினர் நடத்திவைத்தனர். இதில் சுற்று வட்டாரங்களில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தலைமையில்

# தென்காசி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஏடிஎஸ்பி சங்கரிடம் மனு

தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்துநாடார்தலைமையில் தென்காசி மாவட்ட காவல்துறை கண்கா-



ணிப்பாளர் அலுவலகத்தில் ஏடிஎஸ்பி சங்கர் அவர்களிடத்தில் செய்தியாளர் முத்தார் அஹமது என்பவரை கைது செய்ய வேண்டும் என்று புகார் மனு கொடுக்கப்பட்டது அந்த மனுவில்

இந்தியா 24x7 என்ற பெயரில் யூடியூப் சேனல் நடத்தி வரும் முத்தார் என்ற முத்தார் அஹமது என்பவரும் இவரோடு கிறிஸ்தவ மதபோதகர் ஒருவரும் இணைந்து பெருந்தலைவர் காமராஜர் அவர்களை பற்றியும் எங்களுடைய நாடார் சமுதாயத்தை பற்றியும் இழிவான சொற்களால் யூடியூப் சேனல்களில் பேட்டி என்ற பெயரில் ஒளிபரப்பு செய்திருக்கிறார்கள். செய்தியாளர் முத்தார் என்பவர் கடந்த சில மாதங்களாகவே நாடார் சமுதாய தலைவர்களை இழிவு படுத்தி பேசுவதும் அவமானப்படுத்துவதும் காமராஜர் உடைய பெயரை களங்கப்படுத்துவதும் காமராஜர் புகழுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் தன்னுடைய யூடியூப் சேனலில் பதிவு செய்து வருகிறார். கடந்த சில தினங்களுக்கு முன்பு முத்தார் என்பவரும் கிறிஸ்தவ மதபோதகர் ஒருவரும் இணைந்து காமராஜரை பற்றி பேசுவதைப்போல நாடகமாடி காமராஜர் ஊழல் செய்தார் என்றும் காமராஜர் உதவியோடு நாடார்கள் கள்ள நோட்டுகள் அச்சிட்டார்கள் என்றும் காமராஜர் கட்டிய அனைத்து அணைக்கட்டுகளிலும் ஊழல் செய்தார் என்றும் அவர் கட்டிய அணைகள் அனைத்தும் சிறியதாக இருந்த காரணத்தினால் அவ்வப்போது உடைந்தது என்றும் பல அவதூறு செய்திகளை செய்தியாளர் முத்தார் அஹமது அவர்களும் அவரோடு அந்த பேட்டியில் இருந்த கிறிஸ்தவ மதபோதகரும் திட்டமிட்டு பெருந்தலைவர் காமராஜர் மீதும் நாடார் சமுதாயத்தின் மீதும் களங்கத்தைஏற்படுத்தி தமிழகத்தில் ஜாதிய மோதல்களை உருவாக்குகின்ற நோக்கத்தில் இது போன்றதவறான கருத்துக்களை பதிவுசெய்து மக்கள் மத்தியில் கலவரத்தை தூண்டுகின்ற வகையில் பேசி இருக்கின்றார்கள். மதப்போதகர் காமராஜரை பற்றியும் நாடார் சமுதாயத்தை பற்றியும் பேட்டி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை அந்த பேட்டியில் மத போதகரும் செய்தியாளர் முத்தார் அவர்களும் ஒருவரை ஒருவர் எழுதி வைத்து கேள்வி கேட்பதும் பதில் சொல்வதும் அவர்கள் ஒளிபரப்பிய வீடியோவில் திட்டவட்டமாக தெரிகிறது.எங்கள் நாடார் சமுதாயத்தின் மீதும் தமிழகத்தின் முதல்வராக பாராளுமன்ற உறுப்பினராக அகில இந்திய தலைவராக இருந்து இந்த நாட்டிற்கு சேவை செய்த அப்பழுக்கற்ற மனிதர் பெருந்தலைவர் காமராஜர் உடைய பெயருக்கும் புகழுக்கும் களங்கத்தை ஏற்படுத்திய செய்தியாளர் முத்தார் அஹமது அவர்களையும் அவரோடு இணைந்து இருந்த கிறிஸ்தவ மதபோதகரையும் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள் இதில் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் மாநில பொருளாளர் சுப்பிரமணியன் தென்காசி மேற்கு மாவட்ட தலைவர் குருசாமி நாடார் குத்துக்கல் வலசை இந்து நாடார் வாலிபர் சங்க தலைவர் ராம்குமார் செயலாளர் தவசிமுத்து கணக்கப்பிள்ளை வலசை நாடார் சமுதாயம்சார்பாகமுருகேசன் சக்தி குமார் மற்றும் மாரி செல்வராஜ் அருணாசலம் குமரேசன் மீனாட்சி சுந்தரம் ஆண்டார் கிருஷ்ணன் சக்தி குமார் பிரபாகரன் மற்றும்பலர்கலந்துகொண்டனர்




மதுரைதமிழ்ச்சங்கத்தின்அமைப்பாளர்,முதல்தலைவர்வள்ளல்பொன்.பாண்டித்துரை தேவர் 114 ஆண்டு நினைவு நாள் இன்று. மதுரை மத்திய பகுதியில் தமிழ்ச்சங்க சாலையில் அன்னாரின் திருவுருவ சிலைக்கு மதுரை உலா நற்பணி மன்ற தலைவர் ரெ. கார்த்திகேயன் தலைமையில், தியாகதீபம் அ. பாலு, நிலா அறக்கட்டளை நிறுவனர் கவிக் குயில் இரா. கணேசன்,தியாகத்திருவுருவம்வ.உ.சிதம்பரனார்சமூகநலப்பேரவைபொதுச்செயலாளர் மீ. இராம சுப்பிரமணியன் ஒருங்கிணைப்பில் மரியாதை செய்த நிகழ்வு.★


# வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959




செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட படாளம் காவல் நிலையம் இயங்கி வருகிறது இந்த காவல் நிலையத்தில் புதியதாக காவல் ஆய்வாளர் Tr. D. செல்வமணி அவர்கள் 01.12.2025 அன்று பதவி ஏற்று கொண்டார்

# அவ்வையார் விருதுக்கான விண்ணப்பிக்கலாம்

## கலெக்டர் கந்தசாமி தகவல்




ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு

பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்தோரை ஊக்குவிக்கும் வகையில் 2026 ஆம் ஆண்டில் சர்வதேச மகளிர் தினம் விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "அவ்வையார் விருது" வழங்கப்பட உள்ளது.

அவ்வையார் விருதுக்கான விண்ணப்பம் செய்பவர்கள் தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டவராகவும், 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருக்க வேண்டும். குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் பெண் குலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையிலான நடவடிக்கைகள், சமூக சீர்த்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித்தொண்டு, கலை,அறிவியல்,பண்பாடு,கலாச்சாரம்,பத்திரிக்கை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மிக சிறந்து விளங்கும் மகளிராக இருத்தல் வேண்டும். பெண்களுக்கான இச்சமூகசேவையை தவிர்த்து வேறு சமூக சேவைகள் இவ்விருதுக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஈரோடு மாவட்டத்தில் தகுதியான நபர்கள் இவ்விருதுக்கானவிண்ணப்பங்களைதமிழகஅரசின் விருதுகள் இணையதளத்தில் (https://awards.tn.gov.in) 31.12.2025 ஆம் தேதிக்குள் விண்ணப்பித்து மாவட்ட சமூக நல அலுவலகத்தில் கையேடாக தயார் செய்து தமிழ்மற்றும்ஆங்கிலத்தில்அச்சு செய்யப்பட்டுதலா இரண்டு நகல்களுடன் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவ்விருது தொடர்பான விபரங்களுக்கு, மாவட்ட ஆட்சியரகத்தில் உள்ள மாவட்ட சமூகநல அலுவலகம், பழைய கட்டிடம் 6 வது தளம், என்ற முகவரியில் அலுவலக வேலை நாட்களில் தொடர்பு கொண்டு தகவல் தெரிந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட சமூகநல அலுவலக தொலைப்பேசி எண்: 0424-2261405



திருநெல்வேலி அருகே சுத்தமல்லியில் பெட்ரோல் குண்டு வீசப்பட்ட முகமது சாதிக்கின் வீட்டில் தடயங்களை சேகரித்த தடயவியல் நிபுணர்கள்..



சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், திண்டமங்கலம் ஊராட்சியில் உள்ளாட்சிகள்தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.பிருந்தாதேவி அவர்கள் பார்வையாளராக கலந்து கொண்டார்.

# திருவண்ணாமலை தீபத்தையொட்டி மத்தூர் பகுதிகளில் திருப்பிவிடப்படும் வாகனங்கள்

கிருஷ்ணகிரி மாவட்டம்,மத்தூரில் திருவண்ணாமலை செல்லும் கனரக வாகனங்கள் மற்றும் கடலூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்கின்றன. இந்நிலையில் நாளை




சுமார் 85 கி.மீ. தூரத்தில் உள்ள மத்தூரில் கனரக வாகனங்கள் மற்றும் சரக்கு வாகனங்களை (03.12.2025) திருவண்ணாமலையில் தீபத்திருவிழா நடைபெற இருப்பதால், லட்சக்கணக்கான மக்கள் கூடுவார்கள் என்ற நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகபோலீசார் போக்குவர்த்தை கண்காணித்து மாற்றம் செய்துள்ளனர். அதனடிப்படையில் திருவண்ணாமலையில் இருந்து திருப்பத்தூர், வாணிம்பாடி வழியாக செல்ல அறிவுறுத்தி, மாற்று பாதையில் அனுப்பி வைத்து வருகின்றனர். இதற்காக போச்சம்பள்ளி, மத்தூர், கண்ணண்டஹள்ளி, புலியூர், ஊத்தங்கரை உள்ளிட்ட இடங்களில் முகாம் அமைக்கப்பட்டு போலீசார் கண்காணித்து வருகின்றனர்.

றும் சரக்கு வாகனங்களை மாற்றுபாதையில் போலீசார் திருப்பி அனுப்புகின்றனர்.

கிருஷ்ணகிரியில் இருந்து திருவண்ணாமலை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் நாள்தோறும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் திருவண்ணாமலை, விழுப்புரம்,திண்டிவனம்

# அரசு பேருந்து நேருக்கு நேர் மோதி விபத்து



கிருஷ்ணகிரி மாவட்டம் சாம்பல்பட்டி ரயில்வே தரைப்பாலத்தில்மாலை சுமார் 3:00 மணி அளவில் பெங்களூரில் இருந்து திருவண்ணாமலைக்கு வந்த அரசு பேருந்தும் திருவண்ணாமலை இருந்து பெங்களூர் செல்லும் அரசு பேருந்தும் சாமல்பட்டி ரயில்வே தரைப்பாலத்தின்அடியில்நேருக்கு நேர் மோதிக்கொண்டது இதில் பயணம் செய்த பயணிகள் பலத்த காயங்களுடன் ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் 108ஆம்புலன்ஸ் மூலம் பொதுமக்கள் அனுப்பி வைத்தனர் தகவல் அறிந்த சாமல்பட்டி காவல் நிலைய அதிகாரிகள் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர் மேலும் விபத்து குறித்து ஆய்வு செய்து வருகின்றனர் விபத்து பற்றி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பல்வேறு கருத்தாக திருவண்ணாமலைக்கு கிருஷ்ணகிரி பணிமனைக்கு உட்பட்ட தேங்கனிக்கோட்டை ஓசூர் கிருஷ்ணகிரி பாலக்கோடு அரூர் ஊத்தங்கரை ஆகிய பணிமனைகளில் இருந்து பல்வேறு வழித்தடத்தில் இயக்குவதற்காக அரசிடம் அனுமதி பெற்று அனுமதி பெற்ற வழித்தடத்தில் இயக்காமல் திருவண்ணாமலை முதல் பெங்களூர் வரை இயக்குவதால் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் ஓய்வில்லாமல் பேருந்துகளை இயக்குவதால் தொடர்ந்து விபத்துக்குள்ளாவது உயிர் சேதம் ஆவது ஆகிய சூழ்நிலை உருவாகி வருகிறது தொடர்ந்து அதிக விபத்துகளை சந்தித்தது மேற்குறிப்பிட்ட பணிமனை பேருந்துகளை என்று சமூக ஆர்வலர்களும் பயணம் செய்யும் பயணிகளும் பொதுமக்களும் கருத்து தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது எனவே மேற்குறிப்பிட்ட பணிமனை பேருந்துகள் முறையான வழித்தடத்தில் தான் இயக்கப்படுகின்றதா அல்லது மாற்று ஊர்களுக்கு செல்கிறதா என்பதை உயர்மட்ட அரசு போக்குவரத்து அதிகாரிகள் மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் ஆய்வு செய்ய வேண்டும் என்பது இவர்களின் கருத்தாக உள்ளது

# இந்தியாவில் சராசரியாக 811 பேருக்கு 1 டாக்டர் என்ற விகிதம் உள்ளது; மத்திய அரசு தகவல்

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. இதில் நாட்டில் மொத்தமுள்ள டாக்டர்களின் எண்ணிக்கை குறித்து நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் எம்.பி. ஒருவர் கேள்வி எழுப்பினார். இந்நிலையில், இந்த கேள்விக்கு மத்திய சுகாதாரத்துறை மந்திரி ஜே.பி.நட்டா எழுத்துப்பூர்வ பதில் அளித்துள்ளார்.

அதன்படி, இந்தியாவில் அலோபதி மருத்துவத்தில் 13 லட்சத்து 88 ஆயிரத்து 185 பதிவு பெற்ற டாக்டர்கள் உள்ளனர். அதேபோல், ஆயுர்வேத மருத்துவத்தில் 7 லட்சத்து 51 ஆயிரத்து 768 பதிவு பெற்ற டாக்டர்கள் உள்ளனர். இந்தியாவில் சராசரியாக 811 பேருக்கு 1 டாக்டர் என்ற விகிதம் உள்ளது. இந்தியாவில் மருத்துவ கல்லூரிகள் 387ல் இருந்து 818 ஆக அதிகரித்துள்ளது. இளநிலை மருத்துவ இடம் 51 ஆயிரத்து 348ல் இருந்து 1 லட்சத்து 28 ஆயிரத்து 875 ஆக அதிகரித்துள்ளது. அதேபோல், முதுநிலை மருத்துவ இடம் 31 ஆயிரத்து 185ல் இருந்து 82 ஆயிரத்து 59ஆக அதிகரித்துள்ளது.

என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற

# தூய்மை பணியாளர்களுக்கு சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்

ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற தூய்மை பணியாளர்களுக்கு சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்.

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (01.12.2025) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில்தூய்மை பணியாளர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் தூய்மை பணியாளர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் வீடு. பசுமை திட்டத்தின் கீழ் வீடுகள், உயர்கல்விக்கான கடனுதவி,தொழில் புரிய மானியத்துடன் கடனுதவிகள், சம்பள உயர்வு,கறவை மாடுகள் கோருதல் உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கியமனுக்களைதூய்மை பணியாளர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம்வழங்கினார்கள். கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மனுக்களை தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு வழங்கி விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்.




மேலும், தூய்மை பணியாளர்களுக்கு நல வாரியத்தின் சார்பில் விபத்துக் காப்பீட்டுத்திட்டம், பணி இடத்தில் விபத்து உதவித்தொகை, இயற்கை மரண உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை, முதியோர் ஒய்வூதியம், திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, கண்கண்ணாடி உதவித்தொகை, கல்வி உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு உதவித்தொகை வழங்கப்படுகிறது. தகுதியாக தூய்மை பணியாளர் நலவாரியத்தில் பதிவு பெற்றிருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும். விண்ணப்பத்துடன் தேவைப்படும் ஆவணங்களை இணைத்து வழங்கி பதிவு பெற்று பயன்பெறலாம்.

இக்கூட்டத்தில் மாவட்ட மேலாளர் (தாட்கோ) முருகவேல், துணை மேலாளர் ஆனந்த முருகன் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

டிசம்பர் 2 சர்வதேச அடிமைத்தன ஒழிப்பு நாளையொட்டி தொழிலாளர் துறை சார்பில்

# மனித கடத்தல் மற்றும் கொத்தடிமை தொழில் முறை ஒழிப்பு குறித்த மாவட்ட அளவிலான பயிற்சியினை கலெக்டர் ச.கந்தசாமி துவக்கி வைத்தார்

டிசம்பர் 2 சர்வதேச அடிமைத்தன ஒழிப்பு நாளையொட்டி நேற்று (02.12.2025) ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தொழிலாளர்துறையால் மனித கடத்தல் மற்றும் கொத்தடிமை தொழில் முறை ஒழிப்பு குறித்த மாவட்ட அளவிலான பயிற்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி துவக்கி வைத்து, தெரிவித்ததாவது,

கொத்தடிமை தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம் 1976ன்படி கொத்தடிமை தொழில் முறை என்பது கட்டாய உழைப்பின் ஒருவகையாகும் இந்தியாவில் பலவீனமான சமூகங்களை பொருளாதார ரீதியாகவும், உடல் ரீதியாகவும் சுரண்டும் கொத்தடிமை தொழில் முறையினை தடுப்பதற்காகவே இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது இந்திய அரசியலமைப்பு சட்டம் பிரிவு 23-ன்படி மனிதர்களின் உழைப்பினை சுரண்டுவது தடைசெய்யப்பட்டுள்ளது மனிதர்களை உழைப்பிற்காகவும், பாலியல் தொழிலுக்காகவும்,உடல் உறுப்புகளுக்காகவும் கடத்தப்படுவதை தடுக்கும் விதமாக இத்தகு தினத்தினை அனுசரித்து வருகின்றோம்.



எனவே வருவாய்த்துறை, காவல்துறை, தொழிலாளர் துறை உள்ளிட்ட அனைத்து அரசுத்துறைகளுடன் தன்னார்வ அமைப்புகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட அமைப்புகள் ஒருங்கிணைந்து செயலாற்றி கொத்தடிமை தொழில் முறை இல்லாத மாவட்டமாக உருவாக்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

கொத்தடிமைகளாக இருந்து மீட்கப்பட்ட கொத்தடிமைதொழிலாளர்கள் (RBLA) நிதிசாரா உதவி வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுவினை அளித்தார்கள்.

தொடர்ந்து இப்பயிற்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் த

அ.சுஜாதா, உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் நடராஜன், பிரபு ஆகியோர் மனித வணிகம் மற்றும் கொத்தடிமை தொழில் முறை குறித்து அரசு அலுவலர்கள் மற்றும் கொத்தடிமை கண்காணிப்பு விரிவாக தொழிலாளர்கள் விளக்கவுரையாற்றினார்கள். குழு உறுப்பினர்களுக்கு

இப்பயிற்சியில் ஈரோடு தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) கோ.ஜெயலட்சுமி, ஐ.ஜே.எம். நிறுவனத்தை சார்ந்த மைக்ஆஸ்டின், சினேகா, சாராள் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு நந்தா கல்வி நிறுவனங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் கூட்டமைப்பு சார்பில் உலக மாற்றுத்திறனாளிகள் தின கொண்டாட்டம்

ஈரோடு நந்தா கல்வி நிறுவனங்களும்தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகளின் வாழ்வுரிமை நலச்சங்க கூட்டமைப்பும் இணைந்து உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு "சாலை பாதுகாப்பு" பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் மாபெரும் மூன்று சக்கர வாகன பேரணி ஒன்றினை இனிதே நிகழ்த்தியது.



இப்பேரணியினை ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி அவர்கள் சிறப்பு அழைப்பாளராகவும், ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ. சுஜாதா சிறப்பு விருந்தினராகவும், ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் கௌரவ அழைப்பாளராகவும் கலந்துக் கொண்டு துவக்கி வைத்தார்கள். இப்பேரணியானது பெருந்துறை சாலையிலுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து புறப்பட்டு அரசு பொது மருத்துவமனை ரவுண்டானா வரை சென்று முடிந்தது.

முன்னதாக தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகளின் வாழ்வுரிமை நலச்சங்க மாநில கூட்டமைப்பின் மகளிர் பிரிவின் தலைவி எம். இளையரசி அவர்கள் பேரணியில் கலந்துக் கொண்ட மாற்று திறனாளிகள் உட்பட அனைவரையும் வரவேற்று பேசினார். இதனைத்தொடர்ந்துதமிழ்நாடு மாற்றுத்திறனாளிகளின் வாழ்வுரிமை நலச்சங்க கூட்டமைப்பின் தலைவர் ஆர். ராஜரத்தினம் தலைமையுரை ஆற்றினார்.

மேலும் இப்பேரணியில் நந்தா கல்வி நிறுவனங்களின்செயலர்எஸ். திருமூர்த்தி, கே.பி.எம் ஆர்கிடெக் கே.கே. கார்த்திக் மற்றும் ஈரோடு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ச. பூபதி ஆகியோர்கலந்துக்கொண்டு தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்கள். ஸ்ரீ முருகப்பெருமாள் அன்னதானம் சமூக சேவர்கள் நலச்சங்க தலைவர் எஸ். சரவணன் முன்னிலை வகித்தார்.

இப்பேரணியினை தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகளின் வாழ்வுரிமை நலச்சங்க கூட்டமைப்பின் அங்கத்தினர்கள் ஒருங்கிணைந்து சிறப்பாக நிறைவு செய்திருந்தார்கள். இவர்களுடன் சேலம், கரூர் மற்றும் திருப்பூர் மாவட்டத்தினை சார்ந்த மாற்றுத்திறனாளிகளின் வாழ்வுரிமை நலச்சங்கத்தின் தலைவர்களும் கலந்துக் கொண்டு சிறப்பாக நிறைவு செய்திருந்தார்கள். பேரணியின் முடிவில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகளின் வாழ்வுரிமை நலச்சங்க கூட்டமைப்பின் மாநில பொருளாளர் சி. குமார் நன்றியுரை ஆற்றினார்.

பேரணியினை ஏற்பாடு செய்திருந்த தலைவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், செயலர் எஸ். நந்தகுமார் பிரதீப், மற்றும் முதன்மை நிர்வாக அதிகாரி முனைவர் எஸ். ஆறுமுகம் ஆகியோர் தங்களது பாராட்டுக்களை தெரிவித்தார்கள்.



மறைந்த முன்னாள் திரைப்பட நடிகை சில்க்ஸ்மிதாவின் 66வது பிறந்த நாளை ஒட்டி ஈரோடு அகில்மேடு வீதியில் தேனீர்கடை நடத்தி வரும் குமார் என்பவர் 200க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கி அவரது ரசிகர்களுடன் கேக் வெட்டி சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தார். பின்னர் இந்த விழாவில் கலந்து கொண்ட ரசிகர்களுக்கு நடிகை சில்க்ஸ்மிதா படம் பதித்த காலண்டர் வழங்கப்பட்டது.

# டிட்வா புயலால் 4 பேர் உயிரிழப்பு; ஹெக்டேருக்கு ரூ.20,000 இழப்பீடு: தமிழக அரசு அறிவிப்பு



சென்னை: தமிழகத்தில் டிட்வா புயல் காரணமாக பெய்த கனமழையால் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர் என தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். மேலும், நீரில் மூழ்கி சேதமடைந்த விளை நிலத்துக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.20,000 இழப்பீடு வழங்கப்படும் என்று அமைச்சர் அறிவித்தார்.

இது குறித்து அவர் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியபோது, "கனமழையால் தமிழகம் முழுவதும் 85,521.76 ஹெக்டேர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. நீரில் மூழ்கி சேதமடைந்த விளை நிலத்துக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.20,000 இழப்பீடு வழங்கப்படும். பயிர் பாதிப்பு கணக்கெடுப்பு பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கணக்கெடுப்புக்கு பின்னர் உரிய நிவாரணம் வழங்கப்படும்.

நிவாரணத்தை உடனடியாக வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். டிட்வா புயல் காரணமாக பெய்த கனமழையால் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர். 582 கால்நடைகள் இறந்துள்ளன. 1,601 குடிசை வீடுகள் சேதமடைந்துள்ளன. மயிலாடுதுறை மற்றும் விழுப்புரத்தில் இருவர் மின்சாரம் தாக்கி இறந்துள்ளனர். தூத்துக்குடி மற்றும் தஞ்சாவூரில் சுவர் இடிந்து விழுந்து இருவர் இறந்துள்ளனர்.

அரசு மற்றும் தனியார் வானிலை ஆய்வு மைய கணிப்புக்குள் இந்த மழை வரவில்லை. சென்னையில் தோராயமாக 15செ.மீமழைபெய்துள்ளது. சென்னையில் சாலைகளில் விழுந்த 27 மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. தூர்வாரும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்

# பதிவுத்துறை வரலாற்றில் இதுவரை இல்லாத அளவாக ஒரேநாளில் ரூ.302 கோடி வருவாய் ஈட்டி சாதனை




சென்னை

தமிழக அரசின் பத்திரப்பதிவு துறை, அரசுக்கு வருவாய் ஈட்டி தருவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. வீடு, நிலம் வாங்கும்போது, வீடு கட்டுமான ஒப்பந்தம், குத்தகை பத்திரம், கிரயம், தானம் மற்றும் செட்டில்மென்ட் ஆகியவற்றை பதிவு செய்ய மக்கள் பணம் செலுத்தி முத்திரைத்தாள் வாங்குவார்கள். முத்திரை த்தாள் கட்டணம் மூலமாகவே அரசின் கருவூலத்துக்குத் தேவையான அதிக வரி வருவாய் கிடைக்கும்.

சுபமுகூர்த்த தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப்பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு டோக்கன்கள் ஒதுக்கீடு செய்வது வழக்கம். அதன்படி, முகூர்த்த நாள் என்பதால் நேற்று பத்திரப்பதிவு அலுவலகங்களில் கூடுதல் டோக்கன்கள் வழங்கப்பட்டன.

இந்த நிலையில், வரலாற்றில் இதுவரை இல்லாத அளவாக நேற்று ஒரேநாளில் ரூ.302 கோடி வருவாய் ஈட்டி பதிவுத்துறை சாதனை படைத்துள்ளது.

# உ.பி.யில் அனைத்து கோட்ட தலைமையகங்களிலும் மாற்றுத் திறனாளி மறுவாழ்வு மையம்



லக்னோ: உத்தரப் பிரதேசத்தின் அனைத்து கோட்ட தலைமையகங்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு மையங்களை அமைப்பதற்கான ஒப்புதலை, முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான அமைச்சரவை இன்று வழங்கியது.

உலக மாற்றுத் திறனாளிகள் தினம் அனுசரிக்கப்பட உள்ளது. இந்நிலையில், மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு மையங்களை உத்தரப் பிரதேசத்தின் அனைத்து கோட்ட தலைநகரங்களிலும் நிறுவுவதற்கான ஒப்புதலை அம்மாநில அமைச்சரவை வழங்கி உள்ளது.

இது தொடர்பாக உத்தரப் பிரதேச அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், மாநிலத்தில் மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வுமையங்கள் இல்லாத 18 கோட்ட தலைமையகங்களில் மாநில அரசின் முழு நிதி உதவியின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு மையங்களை அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டது.

இந்த அதி நவீன மையங்கள், மாற்றுத்திறனாளிகள் கணக்கெடுப்பு, அடையாளம் காணல், மாற்றுத்திறனாளிகளுக்கான முகாம்களை ஏற்பாடு செய்தல், உதவி சாதனங்களை பழுது பார்த்தல், செயற்கை உறுப்புகள் பொருத்துதல், நடை பயற்சி போன்ற சேவைகளை வழங்கும்.

அதோடு, அரசாங்க நலத்திட்டங்களை அணுகுதல், மாற்றுத்திறனாளி சான்றிதழ்களை அளித்தல், தனித்துவ மாற்றுத்திறனாளி அடையாள அட்டை வழங்குதல், பிசியோதெரபி சிகிச்சை, பேச்சு சிகிச்சை போன்ற மருத்துவ சேவைகளை அளித்தல் போன்றவற்றையும் இந்த மையங்கள் வழங்கும். மாற்றுத்திறனாளிகள் யாரும் சமூக நீரோட்டத்திற்கு வெளியே விடப்படாமல் இருப்பதை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

இவை மட்டுமின்றி, உத்தரப் பிரதேசத்தில் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் 37 மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு மையங்கள், தேசிய வெப்ப மின் கழகத்தின் நிதி உதவியின் கீழ் செயல்படும் ஒரு மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு மையம் ஆகியவை எதிர்கொள்ளும் சவால்களுக்குத் தீர்வு காண்பதோடு, அவற்றையும் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காசி தமிழ் சங்கமம் 4.0 துவக்கம்: பிரதமர் மோடி வாழ்த்து



புதுடில்லி: காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சியின் நான்காவது பதிப்பு இன்று (டிச.,2) துவங்கியது. இதற்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தமிழகத்துக்கும் , காசி நகருக்கும் இடையே உள்ள ஆழமான நாகரிக தொடர்புகளை கொண்டாடுவதற்காக காசி தமிழ் சங்கமம் 4.0 பதிப்பை மத்திய கல்வி அமைச்சகம் டிச.,2 முதல் டிச., 15 வரை நடத்துகிறது. இதன் கருப்பொருளாக ' தமிழ் கற்கலாம்' என அறிவிக்கப்பட்டு உள்ளது. இதில் பங்கேற்க தமிழகத்தில் இருந்து ஏழு குழுக்கள் காசிக்கு வர உள்ளன.

இந்த நிகழ்ச்சி இன்று துவங்கியது. இதில் மத்திய அமைச்சர்கள் தர்மேந்திர பிரதான், எல். முருகன் தமிழக கவர்னர் ரவி, உபி முதல்வர் யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

இந்நிகழ்வுக்கு வாழ்த்து தெரிவித்து பிரதமர் மோடி வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: காசி தமிழ் சங்கமம் இன்று துவங்கிய நிலையில் ' ஒரே பாரதம் உன்னத பாரதம்' என்ற உணர்வை வலுப்படுத்தும் இந்த துடிப்பான நிகழ்ச்சிக்கு எனது வாழ்த்துகள். காசி தமிழ் சங்கமத்துக்கு வரும் அனைவருக்கும் காசியில் இனிமையான மற்றும் மறக்க முடியாத நினைவுகள் அமையட்டும். இவ்வாறு அந்த பதவில் பிரதமர் மோடி கூறியுள்ளார்.

# புதுவையில் விஜய் ரோடு ஷோ நடத்த காவல்துறை அனுமதி மறுப்பு



புதுச்சேரி,

அடுத்த ஆண்டு நடைபெறும் சட்டசபை தேர்தலை முன்னிட்டு த.வெ.க. தலைவர் விஜய் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியை நடத்தி வருகிறார். அதன்படி புதுச்சேரியில் வருகிற 5-ந்தேதி த.வெ.க. சார்பில் விஜய் பங்கேற்கும் ரோடு ஷோ காலாப்பட்டு முதல் கன்னியக்கோவில் வரை நடத்த போலீஸ்டி.ஜி.பி.அலுவலகத்தில் கடந்த 26-ந் தேதி அனுமதிக்கேட்டு கடிதம் வழங்கப்பட்டது. ஆனால் போலீஸ் தரப்பில் இதுபற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லையாம். இந்தநிலையில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு இன்னும் 2 நாட்களே இருக்கும்பட்சத்தில் இதுவரை போலீஸ் அனுமதி வழங்காததால் த.வெ.க.வினர் என்ன செய்வது என்று குழப்பத்தில் உள்ளனர்.

இதற்கிடையே புதுவை போலீஸ் ஐ.ஜி. அஜித்குமார் சிங்லாவை அவரது அலுவலகத்தில் த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் நேற்று சந்தித்து, விஜய்யின் மக்கள் சந்திப்பு அனுமதி தொடர்பாக பேசினார். ஆனால் ரோடு ஷோ நடத்த போலீஸ் தரப்பில் அனுமதி மறுக்கப்பட்டது.

இதையடுத்து புஸ்சி ஆனந்த் முதல்-அமைச்சர் ரங்கசாமியை சட்டசபையில் சந்தித்தார். இந்த சந்திப்பு சுமார் 10 நிமிடங்கள் வரைநடந்தது. தொடர்ந்து அமைச்சர் லட்சுமி நாராயணனையும் சந்தித்து பேசினார். இதற்கிடையே புதுவை உப்பளம் ஹெலிபேடு மைதானத்தில் கூட்டம் நடத்துவது தொடர்பாக புஸ்சி ஆனந்திடம் போலீஸ் தரப்பில் பரிந்துரை செய்ததாக கூறப்படுகிறது. இது தொடர்பாக இன்று (செவ்வாய்க்கிழமை) இறுதி முடிவு எடுக்கப்படும். கரூர் துயர சம்பவத்தை காரணம் காட்டி ரோடு ஷோவுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. விஜய்க்கு அனுமதி மறுக்கப்பட்டது தொடர்பாக, புதுவை சபாநாயகர் செல்வம் கூறியதாவது- புதுச்சேரி சிறிய நகரம் தமிழகத்தை போன்று மிகப்பெரிய சாலைகள் இல்லை. ஆகவே விஜய்யின் ரோடு ஷோவிற்கு அனுமதி வழங்காதது நல்லது. வேண்மென்றால் தனியாக மைதானம் போன்ற இடத்தில் கூட்டம் நடத்தி கொள்ளலாம்' என்று கூறினார்.

# திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்ற அனுமதி அளித்ததற்கு எதிராக மேல் முறையீடு



மதுரை,

திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள தீபத்தூணில் இந்த ஆண்டு முதல் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என மதுரை ஐகோர்ட்டு உத்தரவிட்டது. மலையானது முருகன் கோவில் நிர்வாகச்சொத்து. முஸ்லிம் ஆட்சியாளர்களாலோ, ஆங்கிலேய அரசாங்கத்தாலோ மலையின் மீதான, தேவஸ்தானத்தின் உரிமை பறிக்கப்படவில்லை. குறிப்பிட்ட இடத்தை தவிர மலை மற்றும் சுற்றுப்பகுதிகள் அனைத்தும் தேவஸ்தானத்தின் வசம் இருந்தன. இந்த மலையில் இருந்து கற்கள் வெட்டி எடுக்க முயன்றபோது இந்துக்கள் கடுமையாக எதிர்த்ததால், அந்த திட்டம் கைவிடப்பட்டு உள்ளது.

கோவில் மரபுகளை கடைப்பிடிக்கும் கடமை தேவஸ்தானத்திற்கு உள்ளது

அந்தவகையில் மலையின்மேல் விளக்கேற்றும் பாரம்பரியத்தையும் தேவஸ்தானம் கடைபிடிக்கவேண்டும். விளக்கு ஏற்றுவது புனிதமான செயல். மலையின் மீது உள்ள தீபத்தூணில் விளக்கு ஏற்றுவதன் மூலம் தர்காவின் அமைப்பு எந்த வகையிலும் பாதிக்கப்படாது. தர்காவில் இருந்து 50 மீட்டருக்கும் குறையாத தூரத்தில்தான் தீபத்தூண் உள்ளது.

தீபத்தூணில் விளக்கு ஏற்றாவிட்டால் கோவில் உரிமைகள் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது இந்த ஆண்டு முதல் தீபத்தூணிலும் கார்த்திகை தீபம் ஏற்றப்பட வேண்டும். இந்த உத்தரவை அமல்படுத்துவதில் யாருடைய தலையீடும் இல்லை என்பதை மதுரை மாநகர போலீஸ் கமிஷனர் உறுதி செய்ய வேண்டும்" என்று உத்தரவிட்டது. இந்த நிலையில், நீதிமன்றத்தின் இந்தஉத்தரவைஎதிர்த்து கோவில் நிர்வாகம் தரப்பில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது. கோவில் நிர்வாகம் தரப்பில் செயல் அலுவலர் சந்திரசேகர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

# Imran Khan's Big Charge Against Asim Munir In 20Minute Meeting With Sister



*Former Pakistan Prime Minister Imran Khan is alive but is being "mentally tortured", his sister, Dr Uzma Khanum, said Tuesday evening after a 20-minute meeting with her brother in Rawalpindi's Adiala Jail.*

*Speaking to reporters after the meeting, Dr Khanum said, "Alhamdulillah, he is all right... but he was angry about being mentally tortured. He is locked in his cell all day... and can't communicate with anyone."*

*She also said her brother had blamed General Asim Munir - now the most powerful figure in Pakistan, after seizing control of the entire military and re-writing the Constitution to guarantee lifetime immunity for himself, the other service chiefs, and President Asif Ali Zardari - for his incarceration and condition. The meeting followed rumours about the ex-Prime Minister's health, particularly after his family were barred from meeting him for several weeks. It also followed protests by Imran Khan's supporters - in Islamabad and Rawalpindi - that prompted officials to prohibit large gatherings.*

*That, though, did not prevent protests outside the Islamabad High Court.*

*Concerns over Khan's condition intensified last month after his three sisters - Noreen Niazi, Aleema Khan and Uzma Khan - said they were assaulted for asking to meet with him.*

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.